சிவமயம்

குமரகுருபரன்

ர் 15] 1964-ஞ மார்கழி மீ 1 உ 15-12-64 [இதழ் 12

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினர் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா.
20. நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை-6

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணி மாலை 529
2. திருகிய செம்மனம் 534
3. திருமந்திரம், ஐந்தாம் தந்திரம்.
(Tirumantiram Tantra the fifth) ... 541
4. திருவருட்பயன்—தெளிவுரை ... 545
5. அறிவிப்பு: ஸ்ரீவை. குமரகுருபர சுவாமிகள் நினைவு
காசி யாத்திரை நிதி ரூ. 5000/- 548
6. திருக்கருப்பறியலூர் ... 549
7. Hymns of the Tamil Saivite Saints 552
8. குழந்தைச் செல்வம் 553
9. சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற் கண்ணி ... 559
10. Arudra Festival 560
11. தாயுமானவர் – பராபரக்கண்ணிகள் ... 567
12. பூவும் நாரும் ... 568
13. சுந்தர மூர்த்தி சுவாமிகளின் அற்புதத்
திருப்பதிகங்கள் ... 571
14. திருச்செந்தூரில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவு
(கந்தர் சஷ்டி) அன்னம்பாலிப்பு நிதி 573

உ

திருச்செந்திலாண்டவன் துணை

"குமரகுருபரன்"

பதினைந்தாவது மலரின் பொருளடக்கம்

பொருள்	பக்கம்
அப்பருக்கன்பர் ...	125
அப்பர் கண்ட புரட்சி ...	261
அப்பர் சுவாமிகளின் அற்புதத் திருப்பதிகங்கள் (ஆங்கில மொழி பெயர்ப்பு)	58, 105, 178, 208, 271, 303, 370
அரிசிற்கரைப் புத்தூர் ...	209
அருள் பொழிகடைக்கண் ...	397
அருள் நூலும் அகப்பொருளும்	317, 355, 416
அணையா விளக்கு ...	461
அறிவிப்பு ஸ்ரீவை-குமரகுருபர சுவாமிகள் நினைவு காசி யாத்திரை நிதி. ரூ. 5000/- ...	548
ஆதி குமரகுருபர சுவாமிகளின் வாழ்த்துப்பாக்கள் ...	247
இரண்டாம் நந்திவர்மனின் காசாக்குடிச் செப்பேடுகள் ...	7
இராமலிங்க (சிதம்பர) சற்குரு புலம்பற் கண்ணிகள்	47, 120, 180, 201, 270, 302, 475, 506, 559
இளங்கோ ஞாயிறு	507
ஈங்கோய் இலக்கியம் ...	74
ஏகலைவன்	297
ஓர் பைங்கூழ் சிறுகாலைச் செய் ...	348
ஓம் சக்தி ...	81, 99
கணக்கெழுதுபவர் ...	405
கருணை மலர்ப்பதம் ...	488
கம்பன் கண்ட அரசும் அரசனும் ...	423
காஞ்சிக்கடிகை	339, 388
கீதை காட்டிய வழி ...	34
குழந்தை அன்பு ...	433
குழந்தைச் செல்வம் ...	553
குறிக்கோளும் ஒழுக்கமும் ...	321
குமரகுருபரன் பதினைந்தாம் ஆண்டு மலர் தொடக்கம் ...	i
சாயாவனேசுவரர் தேவார நிதி சேமவைப்பு ரூ. 30,000/- ...	421
சிதம்பரச் செய்யுட் கோவை	1, 89, 137
சிலப்பதிகாரத்தில் இசைப்பாடல்கள் ...	49

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 15 || குரோதி-ஞு மார்கழி திங்கள் 1-ம்வ [15-12-64] || இதழ் 12

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 8)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

இப்பாடற் கருத்து விளக்கம் வேண்டுவோர் முன்னர்ச் சிதம்பரச் செய்யுட்கோவை யெழுபதாவது பாடற் கெழுதிய கட்டுரையை மீண்டும் நோக்குவது சாலநன்றாகும். பழங்கட்டுரைகளைத் தொகுத்து வைத்திராதார், 'வைத்த பொருள் நமக்காம் என்று' வைத்திராதாரே.

வெண்பா

"குன்றஞ் சுமந்தொசிந்த கொம்பேநின் கோயிலும்பொன்
மன்றும் பணிந்தேம் வழிவந்தாற் — பொன்றுஞ்
வரைசென்ற திண்டோண் மறலிக்கு நெய்தல்
முரைசன்றே வென்றி முரசு." (7)

பாவலர் இயம்பும் இயம் வாத்தியகாரர் எவர்க்கும் தெரிய வழி யில்லை. நம் குமரகுருபரர் இயம்பும் இயங்களின் திறம், இப் பாடலில் மட்டும் அமைந்த வாற்ருல் அறிதற்கு இயலாது. முத்துக்குமரசுவாமி பிள்ளைத் தமிழில், சிறுபறைப் பருவத்தில் உள்ள 6,7,8ஆம் எண்ணுடைய விருத்தப் பாடல்களை நோக்கின் ஓராறு அறியலாம். கைத்திறத்தாலும் வாய் வழிவிடும் உயிர்ப்புத் திறத்தாலும் வாத்தியகாரர் இன்புறுத்துவர். பாவலர் சொற்றிறத்தாலேயே இயமெல்லாம் இயம்பவல்லர். அவர்பால் ஒலியும் இவர்பாற் சொல்லும் நின்றன. இரண்டும் ஓரிடத்து நின்றில. இவ்வெண்பாவில் ஆசிரியர், வென்றி முரசு, நெய்தல் முரசு இரண்டனையும் ஒருங்கே யியம்பினுர். 'இயம்புதல்' என்னும் சொல்லாட்சிக்குரியது இன்னோரன்ன இடம் ஆதலையும் இதைக் கற்போர் கருதற் குரியர். 'ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்' என்பது உரிய இடத்தைக் காட்டும். பள்ளியாசிரியர் பார்ப்பனமாணவர்க்கு நள்ளிருட் பொழுதிலும் நன்னெறியியம் பினுர் என்பது அச் சொல்லாட்சிக்கு அஃது இடம் ஆகாமையை அறிவிக்கும். குறிஞ்சிக்கண் முருகிற்கே உரிய இயம் முருகியம். இதுபோன்ற அரிய பொருள்கள் மறைகின்றன இக்காலத்தில்.

'நெய்தல் முரைசு' என்றது 'நெய்தற்பறை'யை. அப்பெய ரால் ஒருபறை (வாத்தியம்) உண்டோ? உண்டு. அதுதான் யாது? நையும் பொழுதில் அடிக்கப்படும் (சாப்)பறையே அது. அன்னதாயின், நைதற் பறை என்றே வழங்கலாகாதோ? வழங்கலாம். முன்னோர் அது தெரியாது கழிந்தனர். இக் கலி மக்கள் அவ்வாறு ஒலி மக்களாகுக. பறையை ஒலித்தற்குக் காரணம் பல உளவாகலாம். 'சாக்காட்டுப் பறை' 'சாப்பறை' என்னும் பெயர் சாதலைக் காரணமாகக் கொண்டாக்கியது.

'நெய்தற் பறை' என்னும் பெயர் இரங்கலைக் காரணமாகக் கொண்டெடுத்தது. 'நெய்தல்' என்னும் பூவின் இயற்பெயர், அது பூக்கும் திணைக்கு ஆகுபெயராயிற்று. ஆனபின், அத்திணையில் நிகழும் 'இரங்கல்' என்னும் உரிப்பொருளாகிய தொழிலுக்கு ஆயிற்று. இரங்கற்கு ஏதுவான நிகழ்ச்சியுண்டாம் பொழுதில் அடிக்கப்படும் பறை 'இரங்கற்பறை' எனப்பட்டது. அந்நிகழ்ச்சி பலவற்றுள், சாதலும் ஒன்று. அது குறித் தெழுப்பும் பறையே சாப்பறை. தொல்காப்பியப் பொருளின் ஐந்தாவது நூற்பாவுரை யிடையே 'நெய்தற் பறையாவது இரங்கற் பறையாதலின் நெய்தல் இரக்கமாம்' என்று நச்சினார்க்கினியர் உரைத்தவா றுணர்க. ('உரை' என்னுஞ் சொல்லாட்சியையும் தொன்னூலா லறிந்து கொளற்பாலது. இவ்வழி அவ்வூர்க்குச் செல்வது என் றுரைத்தார் என்பது பொருந்தாதது. 'உயர் சிவ ஞானபோதம் உரைத்தோன்' 'சிந்தை செய்திப் போதுரைத்தான் மெய்கண் டான்' என்னும் இடங்களை நோக்குக.)

ஒழுக்கத்தாலும் பூவாலும் முல்லை முதலிய நானிலப்பெயரும் உண்டாயின என்பது நச்சினார்க்கினியம். பூவைக் காரணமாக் கொண்டு கடாயினார்க்கு விடையில்லை என்றதால் அது விளங் கிற்று. 'நெய்தல்' என்ற சொல்லுக்கே இரங்கல் என்றுபொருள் என்ற நச்சினார்க்கினியர்க்கு நெய்தல் நைதல் ஆதல் உடன்பா டாகலாம். நெய்தற்பூவும் அதை அறிந்து கண்ணீர் சொரிந்து நைதற்பூவாகலாம். அவ்வாறு ஆயின், 'நெய்தல்' என்ற சொல்லுக்கும் நெய்தற் பறையடிக்கப்பட்டுவிடும்.

நெய்தற்குப் பறை மீன் கோட்பறை என்பது நச்சினார்க் கினியம். முல்லை முதலிய நான்கற்கும் முறையே (1) ஏறுகோட் பறை (2) முருகியம், தொண்டகப் பறை (3) மணமுழவு, நெல்லரிகிணை (4) மீன் கோட் பறை என்பன. பாலைத்திணைக்குச் சூறை கோட்பறையும் நிரை கோட்பறையும் கூறப்பட்டன. இவற்றுள் 'நெய்தற்பறை' என்று கூறப்பட்டிலது. சிலப்பதிகா ரத்தில், பதிகத்துரையில்; அகத்திணைப்பொருட்பகுதி முடியுமிடம் எடுத்துக்காட்டப்படும் வரிசையில் நெய்தற்றிணை கூறும் இடத் தில், "பறை கூறிற்றிலர்" என்றெழுதினார் அடியார்க்கு நல்லார்.

அதாவது சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் நெய்தற்றிணைக்குரிய பறையைக் கூறுது விட்டார் என்றவாறு. நெய்தற்பறைக்குப் பிறப்பிடம் யாது? தொல்காப்பியம் முதலிய வற்றில் அது கூறப்பட்டிலதே! புதிதாக இப்பறையாண்டிருந்து தோன்றிற்று? இது தோன்றத்தக்க ஐயமே.

திருக்குறளில், 'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை' (1115) என்றதனுரையிலே, "அம் முகிழ்ப் பாரம் பொருமையின் இடைமுரியும்; முரிந்தால் அதற்குச் செத்தார்க்குரிய நெய்தற்பறையே படுவதென்பதாம். மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணைக் குறிப்பால் நுசுப்பின் மேல் ஏற்பட்டன." என்று பரிமேலழகர் உரைத்தார். இலக்கணைக் குறிப்பு என்றது வடமொழியிலே 'லக்ஷுணு' என்றதனை. அதன் வியாகரணத்தால் அதனை அறியலாம். வேதாந்திகளுக்கு இதுவே சிறந்த சாதனம்.

இப்பரிமேலழகருரையிலே 'நெய்தற்பறை' என்று எழுதியது எங்கிருந்து கண்டு? அவர்க்குப் பழைய நூல்களிலும் உரைகளிலும் உள்ள சொல், சொற்றொடர், கருத்து முதலியவற்றைத் தம் உரையிற் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ காட்டிக் கொண்டு செல்லும் பழக்கம் உண்டு. இதை உண்மைப் புலவர் யாவரும் உணவர். இக் குறளுரையிலே, புறநானூற்றுப் பாடல் (194) நினைவிலிருந்தது. அங்கிருந்து கண்டு அதை எழுதினுர்.

"ஓர்இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்,
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்
இன்னுது அம்மஇவ் வுலகம்
இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே."

இது பொதுவியற்றிணைப் பெருங்காஞ்சித்துறைப்பாட்டு., பக்குடுக்கை நன்கணியார் பாடியது. இதனுரையிலே 'சாக்காட்டுப் பறை' என்றுரைத்தார் பழைய வுரையாசிரியர். பரிமேலழகர்

எழுதியது, 'செத்தாற்க்குரிய நெய்தற்பறை' என்பது. இதனாலும் பரிமேலழகருரையின் உண்மை நிலை சிறிதுணரப்படும். அவரை இக் காலத்தில் தமிழாசிரியரும் அலட்சியமாகப் பேசுவது பாவப் படுகுழி வீழ்வை ஏதுவாகக் கொண்டிருக்கின்றது.

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலைச் செய்யுளை நோக்குவோம். பிறரை வெற்றி கொண்ட முரசே எமனுடைய முரசு. எமன் எதுவரையில் எல்லாரையும் மாய்க்கும்? தான் மாயும் வரையில். தானே மாயுங் காலம் வந்திட்டதே! இனி அம் முரசு வெற்றிமுரசு ஆமோ? நெய்தல் முரசாகத்தானே மாறி யாக வேண்டும்! அவன் ஏன் சாகின்றான்? எமனுக்கும் சாவுண்டோ! எமனுக்கும் எமனுண்டோ! இதில் என்ன வியப்பு?

காலனுக்கும் முடிவு காலத்தைச் செய்பவன் காலகாலன். காலகாலனது சக்தியை வழிபட்டால் காலன் அணுகவல்லானோ? 'வழிவருதல்' என்பது ஒருவர் பின் செல்லுதல். கொல்லப்படுவார் பின் கொல்வானாகிய எமன் செல்வான். அவன் கொல்லுவான் செல்லுவான்.

முதலில், 'குன்றம் சுமந்தோசிந்த கொம்பே' என்று அம்மையை அழைத்து, நின் கோயிலையும் பொன்மன்றத்தையும் பணிந்தேம் என்று தம் வழிபாட்டைப் பின் அறிவித்து, அத்த கைய எங்கள் வழிவந்தால், எமன் இறந்தே போவான் அன்றி உயிரோடிரான். நின் அருள் அவனை எம்வழி வர வொட்டாது கொன்றே விடும் என்றார் சிவகாமவல்லியின் திருவடிப் பத்தர்.

இதனால், யாவரும் உணரத்தக்கது:- திருவருளாற்றலை வழிபட்டால் ஞானம் பெறலாம். ஞானம் கிடைக்கப் பெற்றால் வீடு எளிது. ஞானமே பிறப்பிறப்பை அழிக்கவல்லது. 'ஞானத் தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்ல ஆகமம் சொல்ல அல்லவாம் என்னும் ஊனத்தார் என்கடவர்?" என்பது சிவஞான சித்தியார்.

(தொடரும்)

திருகிய செம்மனம்

திரு. பொ. முத்தரசு அவர்கள், M. A., B. T.,
தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்லூரி,
அருள்நந்திநகர் – ஸ்ரீவைகுண்டம்.

கல்லாட நூலின் இரண்டாவது பாடல் "தாயறிவு கூறல்" என்னும் அகப்பொருள் துறையைச் சார்ந்தது. தலைவன், தலைவியை மணந்து கொள்வதற்குரிய முயற்சிகளை விரைந்து செய்தல் வேண்டுமெனப் பலவகையால் வேண்டிக் கொண்ட தோழியின் முறையீடுகளை ஏற்காமல் மீண்டும் மீண்டும் தன் போக்கிலேயே சென்று கொண்டிருக்கின்றான் தலைவன். அவன் உள்ளத்தில் அச்சத்தோடு கூடிய சிந்தனையைத் தூண்டவல்ல சில செய்திகளைச் சொல்ல எண்ணுகிறாள் தோழி. அவற்றை நேர் நின்று சொல்லுதல் இயலாமையானும், நாகரிகம் அன்மையானும், சொல்லாமல் விடுதல் கருதிய பயனைத் தாராது ஆகலானும் சொல்லிவிடத் துணிகின்றவள், தன் பேச்சு அவன் காதில் விழுமாறு, தலைவியிடம் தான் கருதியனவற்றைக் கூறுகிறாள். இவ்வாறு தலைவன் எதிர் நின்று பேசாது, தானும் தலைவியும் உரையாடுவது போல், ஆனால் அவ்வுரையாடல் தலைவன் செவியில் விழுமாறு பேசுதற்குச் "சிறைப்புறமாகக் கூறுதல்" என்பது அகப்பொருள் இலக்கண மரபு. இதனால் கேட்போர் முகஞ் சுளிக்கக் கண்ணறச் சொல்லுதல் தவிர்க்கப்படுகிறது. மேலும், சிந்திக்கும் இயல்புடையவரைச் செந்நெறிப்படுத்த இதனினும் சிறந்த வழி இல்லை. வெளிப்படையாகக் கூறுவதினும், குறிப்பால் உணர்த்துவதற்கு ஆற்றல் மிகுதி. தோழியின் அறிவாற்றலுக்கும் தலைவியைக் காக்கும் பணியில் அவளுக்குரிய கடமையுணர்வுக்கும் இது சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

திருக்கோவையார்:

மேற்காட்டிய துறைக்குரிய செய்யுளாகத் திருக்கோவை யாரில் வருவது :

> விண்ணும் செலவறி யாவெறி யார்கழல் வீழ்சடைத்தீ
> வண்ணன் சிவன்தில்லை மல்லெழில் கானல் அரையிரவில்
> அண்ணல் மணிநெடுந் தேர்வந்த தூண்டாம் எனச்சிறிது
> கண்ணும் சிவந்தன்னை என்னையும் நோக்கினள் கார்மயிலே!

தலைவியைக் காண்பதற்காக வந்து மறைவிடத்தில் நிற்கும் தலைவன் செவியில் விழுமாறு, தோழி, தலைவியைக் "கார் மயிலே" என அழைத்துப் பேசுவதுபோல் இயன்றது இச் செய்யுள். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள நட்புறவு மறைபொருளாகவே இன்னும் இருப்பினும், அது தாய்க்குத் தெரிந்துவிட்டது, என்று இதனால் தோழி கூறுகிறாள். "பாதி இரவில், கானற் சோலையில் ஏதோ ஒரு தேர் வந்து போகின்றது என்ற காரணத்தால், தாய் சினங் கொண்டிருக்கிறாள்; அதனால் அவள் கண் சிவந்து என்னைப் பார்க்கிறாள்; அப்பார்வை, வர இருக்கும் எத்தனையோ இடுக்கண்களை உணர்த்துகிறது; இதனைத் தெரிந்து கொள்; ஆயினும் நம் கானற் சோலை தில்லையைச் சார்ந்தது; தில்லையில் எழுந்தருளியுள்ள பெருமான் திருவடிகள், விண்ணவராலும் அறியப்படாத அருமையுடையனவாயினும், அன்பர் மலரிட்டு வணங்குவதற்கு எளிவரும் இயல்புடையன." இக் கூற்றின் நோக்கம், தலைவன் திருமண முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதே. தாய்க்குச் செய்தி தெரிந்து விட்டதால், இனித் தலைவியைக் காணலும், அளவளாவுதலும் இயலா. ஆகவே களவொழுக்கத்தில் கருத்தூன்றும் தலைவன் அதற்குத் தடையேற்படுவதை எண்ணி, அதனால் தலைவிக்கு நேரும் வருத்தத்தையும் உன்னித், திருமணமுயற்சியில் தானாகவே ஈடுபடுவான்; ஈடுபடுதல் வேண்டும்; இன்னும் காலந்தாழ்த்தல் அழகன்று; அம்முயற்சியே அவனது "சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின்" மேன்மையையும், அவன், அவள்பால் கொண்டுள்ள அன்பின் உயர்வையும் எடுத்துக் காட்டும்—என்னும் கருத்துக்களெல்லாம் குறிப்பிற் புலப்படுமாறு அமைந்த செய்யுள் இது.

இதற்கு விளக்கம் கூறப்புகுந்த கல்லாடனூர் கானற்சோலை யின் மலர் மணச் சிறப்புக் கூறுமுகத்தான், வழுதியாகி முழு துலகளித்த ஆலவாய் அண்ணலின் அருட்புகழையும், அப்பெரு மான் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள கூடல்மாநகரை வல மாக வருகின்ற, வழுதியரின் பொய்யாக் குலக்கொடியாகிய வையையின் மாண்பினையும் இனிதெடுத்தியம்பும் எழில், தனித் தன்மை வாய்ந்தது.

வையையின் மாண்பு:

எல்லா வகையாலும் நிறைந்து விளங்கும் கல்வி மாட்சி யுடையவர் இயற்றும் இலக்கியம் என்றும் வாழும். எக்காலத் துக்கும் பொருத்தமான கருத்துக்களை நடுநாயகமாகக் கொண்டு இலங்கும்; கற்பார் உள்ளம் களி கொள்ளும் கவின் நிறைந்த கவிகளால் இயன்று, பூ, மணி, யானை, பொன் முதலிய மங்கல மொழிகளால் தொடங்கப் பெற்றிருக்கும். திங்கள், மழை, கதிர வன் ஆகியவற்றின் தோற்றம் பற்றிய வருணனைகளைக் கொண்டு, யாண்டும் பரவிப், பயில்வார்க்குக் குற்றமற்ற நற் காட்சியை நல்கும். பயில்வார்க்கும், பயின்றோர் எடுத்துரைக்கக் கேட்பார்க்கும் மாறாத இன்பமும் தந்து மகிழ்விக்கும். இத் தன்மையுடைய சான்றோர் கவி, வையை யாற்றின் தோற்றம் செலவு, பயன் ஆகியவற்றிற்கு மிகச் சிறந்த உவமையாகத் திகழ்கின்றது. உயர்வற உயர்ந்த தனது கொடுமுடிகளில் திங் களும் முகிலும் கதிரவனும் தவழும்படியான பெருமையுடையது மலை. அத்தகைய மலையில் தோன்றுகிறது வையை. பூவும், மணியும், யானையும் பொன்னும் போன்ற பல வகைப் பொருள் களையும் வாரிக் கொண்டு வருகின்றது. நானிலங்களிலும் பரவி யோடுகின்றது. காலும், குளமும், வயலும், பண்ணையும் என்று எங்கும் பரவி யாவர்க்கும் நிறைந்த விளைவை நெடிது கொடுத்து இன்புறுத்துகின்றது. இங்ஙனம் வையை யாற்றின் சிறப்பைச் சான்றோர்கவிக்குச் சிலேடை வகையால் இணைத்து உவமித்துக் கூறிக் கல்லாடனூர் போற்றும் திறம், கல்வியிற் பெரியராகிய கம்பர் கோதாவரி யாற்றைச் சான்றோர் கவியென இராம இலக்கு வர் கண்டதாகக் கூறும் "புவியினுக் கணியாய்......" என்று தொடங்கும் பாடலோடு ஒப்பிட்டு மகிழ்தற்குரியது.

முழுதுல களித்த வழுதி:

இங்ஙனம் வற்ருத வளம் பல பெருக்கும், குறையாத நீர்ச் செழிப்புடைய வையை வலமாகச் சூழத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னரின் தலைநகரமாகிய கூடல்மாநகர் திகழ்கின்றது. அங்கு உலகனைத்திலும் வாழும் உயிர்களுக்கெல்லாம் உயிர்க்குயி ராக விளங்கும் ஒப்பற்ற இறைவன் எழுந்தருளி இருக்கின்ருன். அவன் விண்ணேர்களுக்கும் முனிவர்களுக்கும் அறிய வாராத அருமையுடையவனுயினும், அன்பர்க்கு எளிவரும் கருணையாள னுதலின், தடாதகைப் பிராட்டியாரை மணந்து அருள் செய்த போது, திருமணத்தில் கூடிய ஏனைய வேந்தர்க்கு அரசோச்சும் முறைமையினைத் தெரியக் காட்டத் திருவுளங்கொண்டான். அவ்வளவில் கொன்றைமாலை வேப்பமாலையாயிற்று; விடைக் கொடி மீனக்கொடியாயிற்று; பாம்புகளெல்லாம் அழகிய பொன் னுல் செய்த அணிகலன்கள் ஆயின; சடை மறைந்தது; மணி முடி விளங்கியது. "உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர் தொறும் ஒளித்து நின்ற கள்வன்" ஆகிய எம்பெருமான் வழுதி யர் கோனுகி அரசு வீற்றிருந்தான். அவன் அரசு வீற்றிருந்த மாட்சியை

அதிர்விடைக் கொடியங் கயற்கொடி ஆக
அராக்கலன் பொறகலன் ஆகப்
பொதியவிழ் கடுக்கை வேம்பல ராகப்
புலியதள் பொலந்துகி லாக
மதிமுடி வைர மணிமுடி யாக
மறைகிடந் தலம்புமா மதுரைப்
பதியுறை சோம சுந்தரக் கடவுள்
பாண்டிய னுகிவீற் றிருந்தான்

என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளோடு இப்பொருள் அமைந்த கல்லாடப் பாடற்பகுதியை ஒப்பிட்டும் அறியலாம். அவன் அருள் யாண்டும் நீக்கமற நிறைந்து விளங்குவது போலக் கானற்சோலையின் தாழை மணம் எங்கும் பரந்திருந்தது.

தோழியின் பேச்சு:

மணம் நிறைந்த அக்கானற் சோலையில் ஒருபால் மறைவிடத்தில் தலைவியைக் காணும் எண்ணத்துடன் தலைவன் நிற்கிறான். அவனைக் கண்ட தோழி, காணாதவள் போலத் தலைவியுடன் பேசுகிறாள். ஆனால் அவள் பேச்சுத் தலைவன் காதில் நன்கு விழுகின்றது. "பாதி நிலாப்போன்ற அழகிய நெற்றியையுடைய பொற்கொடி போலும் என் தோழியே! நம் அன்னையின் செயலை அறிவாயோ? நம்மைச் சிறந்த ஒழுக்க நெறியில் நிறுத்துவதில் சிறிதும் பின்னிடாதவள் அல்லவா அவள்! அவளுடைய பார்வை இன்று என்னவோ போல் உள்ளது. என்றும் நம்மீது மாறாத அன்புடையவள். அவளுடைய மனமோ செம்மைக்கு இருப்பிடம். நாமோ அவள் கண்மணி போன்றவர். நம்மை அவள் தன் இமையுள் வைத்துப் பொதிவது போலப் பாதுகாப்பவள். அத்தகைய இயல்புடையாள் இன்று திருட்டுக் குற்றம் செய்தவரைப் பார்க்கும் கடுகடுப்போடு என்னைப் பார்த்தாள். அவள் செம்மையான மனம் மாறிப்போய் விட்டது என்பதை அவள் பார்வை காட்டுகிறது. மனத்தில் உள்ளதை வெளிப்படையாகச் சொல்லவும் இல்லை. உள்ளே வைத்துக் கொண்டே கொதிப்படைந்திருக்கிறாள். காரணம் தெரியுமோ? நள்ளிரவில், நொச்சிப் பூக்கள் உதிர்கிற வேளையில், தலைவரது உயர்ந்ததேர் கானற் சோலைக்கு வந்து சென்ற அடையாளங்களை அவள் கண்டிருக்கிறாள். இதனால் என்னென்ன விளையுமோ? அறியேன்! அன்னையின் சினங்கொண்ட முகத்தை நோக்குவதற்கே அச்சமாக இருக்கிறது. என் செய்வது?" இதனைக் கேட்ட அவன் சிந்தனையில் ஆழ்கின்றான்.

கல்லாடர் உணர்த்துவது:

இக்கருத்தினைப் பொதிந்துள்ள கல்லாடனார் பாடல் "தாயறிவு கூறல்" என்ற துறைக்குரிய திருக்கோவையார்ச் செய்யுளுக்கு அருமையானதோர் விளக்கம் ஆகும்: திருக்கோவையார்ச் செய்யுளில் இறைவன் திருவடிகள் "வெறியார் கழல்" எனச் சிறப்பிக்கப் பெற்றிருக்கின்றன. அன்பர்க்கு எளிவரும் அவன் திருவடிகளின் சிறப்பை, அவன் அருள் மணத்தை,

எண்திசையும் புகழ்மணம் பரப்பி யிலங்கும் அவன் திரு வருட் பெருமையை, வழுதியாகி முழுதுலகளித்த வரலாற்றினைக் கூறிவிளக்குவது உள்ளத்தை நெகிழ்க்கிறது, நானிலம் புரக்கும் வேந்தர்க்கு, அரசாளும் முறைமையைத் தானே நல்லர சோச்சிக் காட்டியருளினுன் என்னும் கருத்து, இன்றைய அரசியலாரும் தக்க முறையில் மேற்கொண்டாழுகுதற்குரியதாகும். நாட்டின் செழிப்புக்கும் மேன்மைக்கும் தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச் செல்வரும் இன்றியமையாத தேவை என்பதை வையை யாற்றினைச் சான்றோர் கவிக்குச் சிலேடை வகையால் உவமித்து விளக்குவதிலிருந்து உய்த்துணர்ந்து கொள்ளலாம். இப்பாடலின் முற்பகுதி ஒரு நாட்டுக்குத் தேவை யான வளத்தினையும், அதனைப் பெருக்கவல்ல கருணையுடையார் ஆளும் ஆட்சி முறையையும் இனிது எடுத்து விளக்குவதை எண்ணி மகிழலாம்.

பாடலின் பிற்பகுதியில் தாய்மனத்தின் இயல்பும் மக்களது நல்வாழ்வில் அத் தாய் மேற்கொள்ளும் அக்கறையும், குடிப் பெருமையைக் காப்பதற்கு அவள் எடுக்கும் உறுதியான முயற்சியும், பிழைகண்டவிடத்துக் கண்ணேடாது, கண்ணுலாயே இடித்துணர்த்தும் இயல்பும், வெளிப்படக் கூருது முகக் குறிப்பளவிலேயே மக்கள் உணர்ந்து திருந்திக் கொள்ளும் வகையில் நடந்து கொள்வதும், வியந்து போற்றிப் பின்பற்றற் பாலன. தோழி, தாயின் செம்மையான மனமும் திரிந்து வெகுளு மாறு கொள்கையில் பின்னிடாத தலைவன் நடந்து கொண்டானே என்று தலைவியிடம் வருந்திக் கூறுவதோடு, இனி என்னென்ன இடுக்கண்கள் நேருமோ, என்று அஞ்சியும் பேசுவதால், அவன் வரைவு முயற்சியில் நாட்டங் கொள்ளுமாறு தூண்டுவதும் புலனுகும். இங்ஙனம் தோழி தன் அறிவு மாட்சியாலும் திறம்பட எடுத்து மொழிவதாலும் தலைவன் தலைவியரைச் செந்நெறிச் செலுத்தும் பெருங்கடமையைச் செய்து பேணுகிருள் என்பதும் புலப்படும். இன்னோரன்ன நலங்களை யெல்லாம் கல்லாட நூலின் இரண்டாவது பாடலில் கண்டு மகிழ்க.

....
....
தன்கண் போலும் என்கண் நோக்கிக்
கள்வரைக் காணும் உள்ளம் போலச்
செம்மனம் திருகி உள்ளம் துடித்துப்
புறன்வழங்காது நெஞ்சொடு கொதித்தனள்
மாறுக கற்பின் அன்னை
கூறும் மதியத் திருநுதற் கொடியே.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

விலை மலிவு அறிவிப்பு

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

திருவாசகம்

(எட்டாம் திருமுறை)

சுவாமிகள் வரலாற்றுடன், 224 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த ரக வெள்ளைத்தாளில் தெளிவாக அச்சிடப் பெற்றது. குரோதி வருஷம் மார்கழித் திருவாதிரையை முன்னிட்டு நாளது மார்கழி மாதம் திருவாதிரை வரையிலும் திருவாசகம் பிரதி ஒன்றுக்கு **40** ந. பைசாவாக விலை குறைக்கப்பட்டிருக்கிறது. (பழைய விலை 56 ந. பை.) இது திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

கிடைக்குமிடம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்

ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி ஜில்லா.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 15. இதழ் 11-ன் தொடர்ச்சி

The Sub-divisions in in Yoga

யோகத்து உட்பிரிவுகள்

47. யோகிக்கு யோகாதி மூன்றுள; கொண்டுற்ேறார்
ஆகத்தகு கிரியாதி சரியையாந்
தாகத்தை விட்ட சரியை யொன்றும், ஒன்றுள்
ளாதித்தன் பத்தியுள் அன்பு வைத்தேனே

The yogi has sub-divisions three in his path;
The yoga-kriya that helps him be the yogi;
The yoga-sariya that is bereft of the sariya emotions
And the yoga-inyoga where-in thought centres on the Sun within;
This latter I fixed my heart on.

யோகிக்கு யோகத்துள்ளேயே மூன்று நிலைகளுள்ளன. ஒன்று, யோக நெறிக்குத் தன்னைத் தகுதியாக்கும் யோகத்தில் கிரியை; மற்றொன்று வெளிப்படையான உணர்ச்சியைக் கடந்த யோகத்தில் சரியை; மூன்றாவது, உள்ளே இருக்கும் ஆதித்தனைக் காணவல்ல யோகத்தில் யோகம். இவற்றுள் பின்னதை நான் பெரிதும் விரும்பினேன்.

குறிப்பு: ஆதித்த நிலை பற்றியும், அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனவாதித்தன், ஞானுதித்தன், சிவாதித்தன் பற்றிய விவரங்களும் ஏழாந்தந்திரத்தில் விரிக்கக் காண்க

Stages of Initiation in the Yoga Path

யோக நெறியில் நால்வகைத் தீட்சை

48. யோகச் சமயமே யோகம் பல வுன்னல்
யோக விசேடமே அட்டாங்க யோகமாம்
யோக நிர்வாணமே உற்ற பரோதயம்
யோக அபிடேகமே ஒண்சித்தி யுற்றலே.

Samaya Diksha in yoga is the initiation for diverse yoga efforts;
Visesha Diksha in yoga is the baptismal rite for achievment of eight-fold yoga;
Nirvana Diksha in yoga aids the yogin glimpse the Divine;
And when he is granted the Abhisheka Suddhi, then is he ripe for the Siddha State,

யோக நெறியுள்ளும் நால்வகைத் தீட்சைகளுள்ளன. யோக சமயதீட்சை பலவான யோகப்பயிற்சிக்கு முன்துணையாக அமைவது; யோக விசேட தீட்சை அட்டாங்க யோகம் பயில்வதற்குச் சாதகனைத்தயாரிப்பது; யோகநிர்வாண தீட்சையோகக் காட்சியில் இறைவனைக் காணத் துணைசெய்வது; அரிய அட்டமா சித்திகளைப் பெற்று சிவஞானியாக்க வலிமை யுடையது யோக அபிடேக தீட்சையாகும்.

குறிப்பு: சித்தியுறுதல்—சிவஞானம் பெறுதல். முன்னே 28-ம் பாட்டில், "சித்தர் சிவஞானம் சென்று எய்து வோர்களே" என்றுராக.

ஞானம்

Gnana

49. ஞானத்தின் மிக்க[1] அறநெறி நாட்டில்லை;
ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று;

ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா;
ஞானத்தின் மிக்கார்[2] நரரின் மிக்காரே.

Than Gnana,
There is none better an ethical path, here below
None better a religious faith;
Nothing else than Gnana can confer the Salvation true;
They that are exalted in Gnana
Are truly exalted among men.

ஞானத்தினும் பெரிய அறவழி இவ்வுலகத்தில்லை; அதனினும் பெரிய சமய நெறியுமில்லை; அதுவன்றி வேறெந்த மார்க்கமும் முத்தியில் உய்க்காது. ஞானத்திற் சிறந்தவர்களே மக்களிற் சிறந்தோர்.

பாடம் 1. தவநெறி
2. நகரின்.

ஞாதாந்தம் கண்டவன் ஞானி

The Gnani transcends the Nadanta

50. சத்தமும், சத்த மனனும், தகுமனம்
உய்த்த உணர்வும், உணர்த்தும் அகந்தையும்
சித்தம்-என்றிம் மூன்றும் சிந்திக்கும் செய்கையும்
சத்தம் கடந்தவர் பெற்ற சன்மார்க்கமே.

Out of the primal principle Sound
The Mind springeth;
And out of the Mind – Consciousness, Egoity and Willing;
They who have mastered these three
And the Mind's cogitational activity as well,
Verily have they mastered the principle of Nada
And have truly attained the Gnana.

நாத தத்துவத்திலிருந்து மனம் தோன்றுகிறது; மனத்திலிருந்து புத்தி, அகங்காரம், சித்தம் என்ற மூன்று அந்தக் கரணங்கள் பிறக்கின்றன. இந்நான்கையும் வெல்கின்றவர் நாதாந்த நிலையை அடைகின்றனர். அவரே ஞானியாவார்.

முத்திப்படிகள்

The Stages of Attainment

51. தன்பால் உலகும் தனக்கருகாவதும்,
அன்பால்; எனக்கருளாவதும் ஆவன
என்பார்கள்; ஞானமும் எய்தும்; சிவோகமும்
பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே.

Thus they say:
By devotion the Soul first sojourneth the Lord's world;
And then cometh to dwell in Lord's proximity;
And further on receiveth the Lord's grace,
And in the end attaineth Gnana
There after,
In one Subject-Object identification–the I with Thou
He Shall himself Siva becometh.

பக்தி நெறியிலே நிற்போர் முதலில் சாலோக பதவிபெறுகிறார்கள்; பின்னே சாமீபம் வந்தெய்துகிறது; அதன் பின்னர் இறைவன் அருளைப்பெற, ஞானத்தைப் பெறுகிறார்கள். இறுதியில், சிவமும் தானும் இரண்டற்றதாகிய ஞேயஞாதுரு ஒன்றிப்பைப் பெறுவர்.

வரி. 4. நேயம்-ஞேயம்.

(தொடரும்)

திருவருட்பயன் — தெளிவுரை

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

(மலர் 15. இதழ் 11-ன் தொடர்ச்சி)

10. அணைந்தோர் தன்மை

அஃதாவது இறைவனது திருவருளில் அழுந்தி நிற்போரது தன்மை எனப் பொருள்படும். மேல் ஞானியர்களும் வாசனாமலம் தாக்காதவாறு திருவைந்தெழுத்தினை ஓதித் திருவருளில் அழுந்திநிற்குமாறு கூறினார். இதனுள் அவரது இயல்பினை விவரிக்கின்றார் ஆதலின் மேலையதனோடு இயைபுடைத்தாயிற்று.

91. ஓங்(கு)உணர்வின் உள்ளொடுங்கி உள்ளத்துள் இன்பொடுங்கத்
தூங்குவார்மற்(று) ஏதுண்டு சொல்.

(தெ-ரை) இறைவனது ஞானத்தின் கண்ணே தமது அறிவு இச்சை செயல்கள் அடங்கப் பெற்றுத் தமது அறிவினுள்ளே பேரின்பம் அடங்கும்படி நிட்டையில் அழுந்தி நிற்பர் ஞானியர்கள். அவர்களுக்கு வேறு பேறு என்ன உளது? ஒன்றுமில்லை, என்பதாம்.

தூங்குதல் - வேறுசொற் செயல்களின்றி அதுவேயாய் அசைவின்றி இருத்தல். மற்றேதுண்டு சொல் என்ற தொடருக்கு 'இத்தகைய ஞானியர்க்குச் சொல்லென்பது யாதுளது? ஒன்றுமில்லை' (மௌனமே அவர்க்கு இலக்கணம்) எனப் பொருள் உரைப்பாரும் [1] உளர்.

1. கா. சு. பிள்ளை; தே. ஆ. சீனிவாசன்.

92. ஐந்தொழிலும் காரணர்கள் ஆம்தொழிலும் போகம்நுகர்
வெம்தொழிலும் மேவார் மிக.

(தெ–ரை) இறைவனால் செய்யப்படும் ஐந்து தொழில்களை யேனும், திருவருளால் அதிட்டிக்கப்பட்டுச் செய்யும் தொழில் களை யேனும், உலகியற் பொருள்களை நுகர்தற்கானவர்தம் கொடுந் தொழில்களை யேனும், அந்த ஞானியர்கள் செய்யார்கள் என்பதாம்.

ஞானியர் சிவத்தோடு கலந்து பேரின்பத்தைத் துய்ப்ப தன்றிப் பிறதொழில்கள் எவற்றையும் செய்யார்கள் என்பது இதன் கருத்து ஆகும். இதனையே,

"உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக் குரியன்
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே"

என்னும் சித்தியார்ப் பகுதியும் விளக்கி நிற்கும்.

'*காரணங்கள்* ஆம் தொழிலும்' எனப்பாடங் கொள்வர் தே. ஆ. சீனிவாசன் அவர்கள்.

33. எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கிவர்ஒன்(று)
அல்லாது அறியார் அற.

(தெ–ரை) எல்லாவற்றையும் அறியும் அறிவு தமக்கு இருப் பினும் ஞானியர்கள் இறையின்பத்தில் அழுந்தி நிற்றலன்றி வேறொன்றும் செய்தலறியார் என்பதாம்.

"பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்"

என வரும் சித்தியார்ப் பகுதியும் இதனை நன்கு விளக்குதல் காண்க.

94. புலனடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்
தலம்நடக்கும் ஆமை தக.

(தெ–ரை) நிலத்தில் செல்லும் ஆமை இடர்வந்துழித் தனது ஐந்துறுப்புக்களையும் அடக்குதல் போல ஞானியர்களும், தமக்கு

இடர்புகுதாவாறு ஐம்பொறிகளையும் காத்துத் தமது முதற் பொருளாகிய இறைவனது பேரின்பத்தில் அடங்கியிருப்பர்; வேறு பிற செய்திகளில் தலையிடார் என்பதாம்.

'உரனென்னும் தோட்டியால்'; 'ஒருமையுள் ஆமை போல' என்ற திருக்குறள்கள் ஈண்டு நினைவு கூர்தற்குரியன.

95. அவனையகன்(று) எங்கின்றும் ஆங்கவனும் எங்கும்
இவனையொழிந்து உண்டாதல் இல்.

(தெ–ரை) இறைவனை யகன்று எவ்வுலகமும் இல்லை; அது போல அவ்விறைவனும் தன்மை யடைந்த இந்த ஞானியரை யொழிந்தும் எவ்வுலகமும் இல்லை என்பதாம்.

இறைவனைப் போன்றே ஞானியரும் வியாபகமாய் நிற்பர் என்பதாம். "இகலோகத்தே முத்திபெறும் இவன்தான்...... கண்ணுதல்தன் நிறைவதனில் கலந்து காயம் கழிந்தக்கால் எங்குமாய்க் கருது அரன்போல் நிற்பன்" என்னும் சித்தியார் பகுதியும்; தானே திசையொடு தேவருமாய் நிற்கும்" என்ற திருமந்திரப் பகுதியும் ஈண்டு ஒப்பிட்டு உணர்தற்குரியன.

(தொடரும்)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–13 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 1–50 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	5 ஷிலிங் அல்லது ரூ. 3–25 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

அறிவிப்பு

ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவு காசியாத்திரை நிதி ரூ. 5000/-

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ரூ. 5000/- (ரூபாய் ஐயாயிரம்) மூலதனம் வழங்கப்பெற்று ஸ்ரீவைகுண்டம் மாணவ-மாணவிகள் காசியாத்திரை நிதி நிறுவப்பெற்று, அதற்குரிய சாசனமும் 23-2-1949-ல் ஸ்ரீவைகுண்டம் ஆவணப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பெற்றுமுள்ளது.

ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற தேவாரத் திருமுறைப் போட்டியில் முதன்மையாகப் பரிசு பெறும் மாணவனோ, மாணவியோ, அவர்களின் பெற்றோரோ, பாது காவலரோ (Guardian) காசியாத்திரை செய்ய, யாத்திரைச் செலவு வகைக்கு ரூ. 135/- (ரூபாய் நூற்று முப்பத்தைந்து) இனமாக ஷை மூலதன வட்டி வருமானத்திலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப் பெறும்.

தேவாரத்திருமுறைப் பரிசு கிடைத்த ஒரு மாதத்திற்குள்ளாகப் பரிசு பெற்றுள்ள மாணவன் அல்லது மாணவி, தன்னுடைய பள்ளிக் கூடத் தலைமை ஆசிரியர் மூலம் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் மடாலயத்தின் தருமகர்த்தருக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். காசியாத்திரை செல்பவருக்கு ரூ. 135/- அளிக்கப்பெறும். காசிசென்று திரும்பும் பொழுது எடுத்துக்கொண்டு வரக்கூடிய அளவு கங்கைத் தண்ணீர் கொண்டுவந்து ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அபிடேகத்திற்கு ஷை மடாலயம் தருமகருத்தரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

பரிசுத் தொகை கிடைத்த 15 தினங்களுக்குள், காசியாத்திரை தொடங்க வேண்டும். புறப்படுவதற்கு இன்னும் கொஞ்ச காலம் வேண்டுமென்று யாத்திரை செல்பவர் எழுதிக் கேட்டுக் கொண்டால் தருமகர்த்தருக்கு அனுமதிக்க உரிமையுண்டு.

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் மடம்,
ஸ்ரீவைகுண்டம்.
1-12-64

டி. எம். குமரகுருபரன்,
மானேஜிங் டிரஸ்டி.

குறிப்பு:- இவ்வருடத் தேவாரத் திருமுறைப் போட்டியில் முதற்பரிசு இரண்டாம் பரிசு பெற்ற இரண்டுபேர்களும் காசியாத்திரை செல்ல 1964-65-ல் அனுமதிக்கப் பெறுவர்; 31-12-64 வரை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பெறும்.

திருக்கருப்பறியலூர்

தேவாரமணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.
திருப்பனந்தாள்.

கோயில் என வழங்கும் தில்லைத்தலம்; இத்தல முதலாக ஈங்கோய்மலை எனும் தலம் ஈருக, சோழநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்கள் அறுபத்துமூன்று. இத்தல வரிசையிலே இருபத்து ஏழாவது தலமாக விளங்குவது 'திருக்கருப்பறியலூர்' என்னும் திருத்தலம். மேலைக்காழி என வழங்கும் இத்தலம், ஆயினும் 'தலைஞாயிறு' என்றே இன்று வழங்கி வருகின்றது. வைத்தீஸ்வரன் கோயில் என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து திருப்புன்கூர் வழியே ஐந்தாவது கல்லிலேயுள்ளது இத்தலம். ஆலயத்தின் பெயர் 'கொகுடிக் கோயில்' என்பதாகும். ஞான சம்பந்தப் பெருமானது இந்தளப் பண்ணையும், சுந்தரமூர்த்தி களின் நட்டராகப் பண்ணையும் பெற்றுள்ளது இத்தலம்.

" சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறியலூரே" (ஞானசம்பந்தர்)

"'முட்டாமே நாள்தோறும் நீர்மூழ்கிப்
பூப்பறித்து மூன்று போதும்
கட்டார்ந்த இண்டை கொண்டடிச் சேர்த்தும்
அந்தணர்தங் கருப்பறிய லூர்க்
கொட்டாட்டுப் பாட்டாகி நின்றானைக்
குழகனைக் 'கொகுடிக் கோயில்'
எட்டான மூர்த்தியை நினைந்தபோ
தவர் நமக்கு இனியவாறே." (சுந்தரர்)

கருப்பறியலூரில் வாழ்ந்த அந்தணர்கள் இறைவனை எப்படி மறவாத மனமுடையராய் வழி பட்டார்கள் என்பதைப் படம் பிடித்துக் காட்டும் சுந்தரர், அத்தலத்தில் இறைவன் உறைகின்ற கோயிலையும் குறிப்பிட்டுவைக்கின்ருர்; அதுதான் 'கொகுடிக்கோயில்' என்பது. கோயில் திருச்சுற்றில் கொகுடிமுல்லை இருப்பது இதன் சிறப்பைக் காட்டும்.

'கலைமலிந்த தென்புலவர் கற்ருேர்தம்
இடர்தீர்க்குங் கருப்பறிய லூர்'

என்பது சுந்தரரின் சொல்லாட்சி! இதிலிருந்து அறியாதார் அல்லலைக்காட்டிலும், எல்லாம் அறிந்தாரின் அல்லல் ஒரு எல்லைக்குள் அடங்காதென்பதை யுணரமுடிகின்றது. எல்லாம் உணராதவர் செய்யும் தவற்றைவிட எல்லாம் தெரிந்தவர்செய்யும் தவறு அதிக விலையைப் பெறும். அவர்களுக்கு ஏற்படும் இடர் இலேசில் தீராது. அப்படியுள்ளோர் இடர் தீர்க்கும் தலம் கருப்பறியலூர்.

'குற்றம் பொறுத்த நாதேச்சுரர்' – இது இறைவன் திருநாமம்.
'கோல்வளைநாயகி' – இது அம்மையின் திருநாமம்.

சரி, குற்றம் பொறுத்த இந்த நாதர், என்ன குற்றத்தைப் பொறுத்தார்?

வானவருய இந்திரன் வெள்ளிமால்வரைக் கயிலையை நோக்கி விரைந்து செல்கின்ருன்; செருக்குடன் கண்டுபோற்றவே அவன் அப்படிச் செல்கின்ருன். இதைக்கண்டார் சிவபெருமான் அவனது செருக்கினை அடக்கவேண்டுமென்று திருஉள்ளங் கொண்டு இந்திரனது முன் ஓர் வீரனுக வேடங் கொண்டு நிற்கின்ருர். வீரனைக் கண்ட இந்திரன் தன்செலவை நிறுத்தி "நீ யார்?" என்று கேட்கிருன்.

வீரன் மௌனம் சாதித்து நிற்கிருன். இந்திரனுக்குக் கோபம் வந்து விடுகின்றது; தன்னிடமுள்ள வயிரப்படையை அவ்வீரன் மீது எறிகின்ருன். அந்த வயிரப்படையானது அந்தக் கணமே துகளாய்ப்போய் விடுகின்றது. வீரனுய சிவபெருமான் கோபங்கொண்டவராய் உக்ரவடிவங்கொள்ளுகிருன். இந்திரன் தலைகுனிந்து வணங்கித்தன் குறையைப் பொறுத்தருளுமாறு

விண்ணப்பம் செய்கின்ருன். செய்யவனும் சிவபெருமான் விண்ணப்பம் கேட்டு நல்கும் பெருமை யுடையவனுயிற்றே!

தன் சினத்தை, அடக்கிக் கொண்டு விடுகின்ருன் சிவ பெருமான்! அந்தச் சினத்தீயானது கடலிலேபோய் விழுகின்றது. அதுவே சலந்தரன் ஆகிறது. வஞ்சகமே உருவாகிய சலந்த ரனைச் 'சலமுடைய சலந்தரன்' என்பார் மாணிக்கவாசகர். சலந் தரன் என்ற அசுரன் சம்காரம் விற்குடியில். அதனுல் அவ் வரலாற்றை இங்கு விரிக்காது விட்டு விடுகின்றேன்.

இப்படி இந்திரனுக்கு அருள்புரிந்த காரணம்பற்றி இத் தலத்து இறைவன் 'குற்றம் பொறுத்த நாதஈச்சுரர்' என்னும் நாமத்தால் அழைக்கப்படுகின்ருர். இத்தலத்திலே சீர்காழி பிரமபுரீசர்கோயிலில் உள்ளது போல் 'உமாமகேசுவரர்' 'சட்டை நாதர்' இருக்கின்றனர். காழியம்பதியிலேயுள்ள நினைப்பும்—ஆசையும் இப்படியொரு அமைப்பைப் பிற்காலத்தவர் ஏற்படுத் தியிருக்கலாம். அதனுல் இது 'மேலைக்காழி' என்ற பெயரும் கொண்டிருக்கலாம்.

இராகம்: பூர்விகல்யாணி　　　　தாளம்: ஆதி

பல்லவி

அருள்நிதியே உந்தன் அருளை என்று பெறுவேன்
குருபரனே நீ ஆதரி என்றும் மறவேன்　　(அருள்)

அனுபல்லவி

கருமவினையால் என்னைக் கலங்கவைத்தல் கண்யமோ
தருமமோ நீதியோ தயைபுரிவ தாகுமோ　　(அருள்)

சரணங்கள்

1) பொருள்படைத்த பெருமை போகசுகமும் கண்டேன்
மருளடைந்து மனதில் மயக்கம்மிகவே கொண்டேன்
இருளடைந்த வாழ்வினில் இருட்டறிவை நீக்கியே
திருவுளமிரங்கியே திருந்திடச் செய்வாயே　　(அருள்)

2) அற்பஆனந்தம்கொண்டு அலைந்து திரிந்திடாமல்
சர்வேசனே உந்தன் சரணம் மறந்திடாமல்
நிர்மல சுகம்தேடி நின்னைத்தினம் துதிக்க
வர்மமும் வையாமல் கருணைக்கடைக்கண் வைக்க (அருள்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணூர்பேட்டை, திருநெல்வேலி-3.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 15, இதழ் 11-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

51. கானநாடுகலந்துதிரியிலெ
னீனமின்றியிருந்தவஞ்செய்யிலெ
னூனையுண்டலொழிந்துவானோக்கிலென்
ஞானனென்பவர்க்கன்றிநன்கில்லையே.

51. Why roam the jungle, wander cities through?
Why plague life with unstinting penance hard
Why eat no flesh, and gaze into the blue?
Release is theirs, and theirs alone, who cry
Unceasing to the Lord of wisdom high.

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

குழந்தைச் செல்வம்

அம்மானைப் பாடல்

திருமதி ஜெயகுமாரி பாஸ்கரன் அவர்கள்

"மைக்கம்மலரிற் பொலிகதிர் முத்தம்மனை நகைமுத் தொளி தோயக் கண்டவர் நிற்கப்பிறர் சிலர் செங்கைக் கமலச் சுடர் கதுவச் செம்மணியிற் செய்திழைத்தன எனவும் சிற்சிலர் கட்கடையின் செல்வியை வவ்விய பின் கருமணியிற் செய்தன கொல்லெனவும் தம்மனம் ஒப்ப உரைப்பன மற்றைச் சமயத் தலைவு பெருர் தத்தமில்நின்று பிதற்றுவ பொருவத்தனிமுதல் யாமென்பார்க் கம்மனையாயவர் தம்மனை ஆனவள் ஆடுக அம்மனையே அழகு தழைந்த கல்யாண சவுந்திரி ஆடுக அம்மனையே"

இது ஒரு அம்மானைப்பாடல். அம்மாவுடன் பிறந்த அண்ணன், தம்பிகளைப் பற்றிய பாடல் இது என்று யாராவது நினைப்பீர்களா? இல்லை, இல்லை. இது பெண் குழந்தைகள் பந்தாடுவதைப் பற்றிய பாடல், 'அம்மானை' என்ருல் பந்து என்ற ஒரு பொருள். ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பந்துகளை வீசி எறிந்து, எறிந்து பிடிக்கின்ற ஆட்டம்; பெண்கள் கூடி ஆடுகின்ற ஆடல்.

இது பெண்கள் கூடி ஆடுவதனுலேயே 'அம்மானைப் பாடல்' என்று சொல்லப்படுகிறது. 'அம்மானை' என்ற சொல் எப்படி பந்து என்று பொருள் தரும்? என்ற கேள்வி சிலர் உள்ளங்களில் எழலாம். அல்லவா? பெண்களை 'அம்மானுய்' அம்மானுய் என்று விளித்து ஆடுவதனுலே அந்த பந்தாட்டமே 'அம்மானை' என்று பெயர் பெறுவதாயிற்று, ஆடும் பந்து கூட 'அம்மானை' என்று சொல்லப்பெறுகின்றது.

மேலே கண்ட கட்டுரை திருச்சி வானெலி நிலையத்தார் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

'அம்மானை' என்றாலே 'தாய்', 'பெண்' என்றுதான் பொருள். 'அம்மனை' அல்லது 'அம்மானை' என்றாலும் அதே பொருள்தான். 'நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்! மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்' என்று ஆண்டாள் நாச்சியார் தமது திருப்பாவையில் பாடியிருப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். 'அம்மனாய்'! என்று சொல்வது 'தோழி', பெண்ணே! என்று சொல்வதுபோல்தான்.

திருவாசகத்தில் மாணிக்க வாசகப் பெருமான் 'திருஅம்மானை' என்ற ஒரு பகுதியைப் பாடியிருப்பது உங்கள் நினைவுக்கு வரலாம். "ஊனாய், உயிராய், உணர்வாய் என் உட்கலந்து, தேனாய், அமுதமாய், தீங்கரும்பின் கட்டியுமாய்" எனத்துவங்கி 'அம்மானாய்'! என முடியும் அப்பகுதியில் வருகின்ற இப்பாடலிலே, இறுதியில் வரும், 'அம்மானாய்' என்பதற்குப் பெண்ணே! என்று தான் அர்த்தம்.

இப்படியாக, பெண்களைக் குறிக்கும் 'அம்மானாய்' என்ற சொல், பெண் குழந்தைகளின் பந்தாடல் பற்றிப் பிள்ளைத் தமிழில் பந்தாடும் பாடலுக்கும் பிற்காலத்தில் வைக்கப் பெறலாயிற்று.

'பிள்ளைத்தமிழ்' எனும் பாடல்நூல் பிள்ளைப் பருவத்தைப் பற்றிய ஆடல்களைக் குறித்துப் பாடுவது. பத்துப்பருவங்களாக வகுத்துப் பாடுவார்கள். பிள்ளைத் தமிழ்பாடும் புலவர்கள் சாதாரண குழந்தைகளின் பிள்ளைப்பருவத்தைப் பற்றி பாடுவதில்லை. தெய்வங்களைப் பற்றியே பிள்ளைத் தமிழ் பாடியிருக்கிறார்கள்.

பெண்பால் தெய்வங்களாகிய குளத்தூர் அமுதாம்பிகை, மதுரை மீனாட்சியம்மை, அளகாபுரி உமையம்பிகை, திருவுத்தர கோசமங்கை மங்களேசுவரி, திருபுக்கொளியூர் அவிநாசி பெருங்கருணையம்மை முதலிய அருட்சக்திகளைப்பற்றிப் பிள்ளைத் தமிழ் நூல்கள் பாடப் பெற்றிருக்கின்றன.

இத்தெய்வங்களின் குழந்தைப் பருவத்தில் அம்மானைப் பந்தாடியதைப் பற்றிப்புலவர்கள் பாடுகின்றார்களே, அவர்கள் இத்தெய்வங்கள் குழந்தையாயிருந்தபோது பார்த்திருக்கிறார்

களா என்ற கேள்வியை யாரும் கேட்டுவிடாதீர்கள். புராணங்களிலே, தத்துவ நூல்களிலே தெய்வத்தின் பேராற்றலைப் பெண் வடிவமாகக் கூறியிருப்பதைப் பற்றிய செய்திகளை எல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு, அவற்றைக் குழந்தைச் செயல்களில் செறித்துப் பாடுவது தான் பிள்ளைத் தமிழ் பாடுகின்ற மரபாக இருந்திருக்கின்றது.

முதலில் நீங்கள் கேட்டீர்களே, ஒரு அம்மானைப் பாடல், அது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் அம்மானைப் பருவத்தில் வருகின்ற ஒரு பாடலாகும். மற்றப் பெண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் அம்மானைப் பருவத்தில் வருகின்ற கருத்துகளை, ஒரு வாறு அறிந்து கொள்வதற்கு மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் அம்மானைப் பாடல்களின் கருத்தை அறிந்து கொள்வது இவ் வேளைக்குப் போதுமானதாகும்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்பாடிய குமரகுருபரர் மிகச் சிறந்த புலமையும், கற்பனைத் திறமும் பூண்டவர். அவர் பாடல்களிலே அவற்றை நிரம்பக் காணலாம். மீனாட்சியம்மை, தமது அருமைத்திருக்கரங்களினால் பந்துகளை எடுத்து வானவெளியில் வீசுகிறார். பந்துகள் விரைந்து மேலே ஓடி, விரைந்து கீழே வருகின்றன. இதனை அவர் கற்பனைக் கண்களால் கண்டு கூறுகின்ற நயத்தை அறிந்து மகிழ்வோம்.

ஆண் யானையினுடைய பெரிய வயிற்றை நிரப்புவதற்கு, சோற்றை உருண்டை உருண்டையாகப் பந்துபோலத் திரட்டி, விரைந்து விரைந்து எறிவது போல் இருந்ததாம். பந்துகள் மேலே செல்வது திருப்பாற்கடல் கடைந்த போது, அதில் வந்த அமுதத்தைக் கலசம் கலசமாக முகந்து அங்குச் சூழ்ந்திருந்த தேவர்களுக்கு வீசி வழங்குவது போலவும் இருந்ததாம். முத்தினாலேயே செய்யப்பட்ட உருண்டைகள் வரிசை வரிசையாக மேற் சென்று விழுவது போலக் காட்சியளித்ததாம்.

அம்மை பெருமாட்டியின் தாமரை போன்ற கரங்களில் இருந்து வெள்ளை அன்னங்கள் ஒவ்வொன்றாகப் பறந்து மேலே ஓடுவது போலவும் இருந்ததாம் அம்மை மீனாட்சி பந்தாடும்காட்சி, கண் கொள்ளாக் கவின் காட்சி!

மற்றுமொரு பாடல் சுவையுங்கள்! பிள்ளைத்தமிழை அதிலும் அம்மானையைக் கேட்பது நம்மைச் சலிப்படையவா செய்கிறது? புலவருடைய கவிநயம் ஒவ்வொரு பாடலிலும் அற்புதமாகக் காட்சி யளிக்கிறது.

"உயிராயிருக்கின்ற சேடியரின் மலர்மீதுதித்தவள்எதிர்த்து நின்ளேடொட்டி யெட்டிப்பிடித்திட்ட வம்மனை தேடி ஓடியாடித் திரிய நீ பெயராதிருந்து விளையாடுவது கண்டு எந்தை பிறை முடி துளக்க முடிமேற் பெருகு சுரகங்கை நுரை பொங்கலம்மானை யப் பெண் கொடியும் ஆடல்மான வெயரா மனம் புழுங்கிடு அமரர் தச்சனும் வியப்பச் செயுந்தவளமா மேடையும் தண்தரள மாடமும் தெண்ணிலா வீசத் திசைக்களிறெலாம் அயிராவதத் தினை நிகர்க்கு மதுரைத் தலைவி அம்மானை ஆடியருளே ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்த பெண் அம்மானை ஆடியருளே"

மீனாட்சிக்குப் பல தோழிகள் உண்டு. அரசி அல்லவா? அவர்களில் தாமரை மலரில் தோன்றுபவள் திருமகள் – இலக்குமி அழகுடையவள்; நமக்குச் செல்வம் அளிப்பவள். அவள் மீனாட்சியின் உயிர் போன்று விளங்குபவள். அவள் மீனும்பிகைக்கு எதிராக நின்று சபதம் செய்து அம்மை எட்டிப் பிடித்த அம்மானையைக் காணுமல் தேடி ஓடி ஆடித் திரிகின்ருள். பெண்கள் இயற்கையிலேயே குறும்புடன் கூடிய நகைச்சுவை மிக்கவர்கள். அத்தகைய பெண்களின் பிரதிநிதியாக உள்ள தெய்வங்களுக்குள் விளையாட்டு என்ருல் அது அற்புதம்தானே!

இலக்குமி அவ்வாறு தேடித்திரிய, மீனாட்சியம்மை பெயராது இருந்து விளையாடுவது கண்டு எம்பிராஞகிய சிவபெருமான், பிறை அணிந்த சடைமுடியை அசைக்கின்ருராம். தன் மனைவியினுடைய வேடிக்கையான விளையாட்டைக் கண்டு அவர் தலையை அசைத்து மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ருர். அப்பொழுது சடைமுடியில் தங்கியுள்ள ஆகாய கங்கையின் நுரை மேல் எழுதல் அப்பெண்ணும் அம்மானை ஆடுவதை ஒத்திருக்கிறதாம் பார்ப்பதற்கு.

தம் கற்பனைக் கண்களால் பார்த்துப் புலவர் பாடும் அழகே அழகு. தம் திறத்திஞல் மற்றவரையும் ஆடச்செய்யும் அன்னையின் செல்வத்தினைக் குறிக்கின்ருர் பாருங்கள்–கட்டிடம் கட்டு

வதிலே வல்லவனுன தேவதச்சன் கண்டு வியக்கின்ருனும் – எதை? வெண்ணிறமுற்ற மேடைகளும் முத்திஞற் செய்த மாடங் களும் தெளிவான நிலவொளி வீச, திக்கு யானைகள் எல்லாம் வெண்ணிறம் பொருந்திய ஐராவத யானையை ஒத்திருக்கும்படி யான மதுரைத் தலைவியே அம்மானை ஆடி அருளம்மா'' என்கி ருர். தித்திக்கும் தேனைப் போலுள்ளதல்லவா? ஆனல் திகட்ட வில்லைதானே!

இன்னும் ஒரு பாடலில் கவிநயத்தின் உச்சிக்கே போய்விடு கிருர் குமரகுருபரர்.

“குலைப்பட்ட காந்தள் தளிர்க்கையிற்செம்மணி குயின்றவம் மனை நித்திலம் கோத்தவம்மனை முன் செலப்பின் செலுந்தன்மை கோகனக மனையாட்டிபால் கலைப் பட்ட வெண் சுடர்க் கடவுள் தோய்ந்தேக அதுகண்டு கொண்டே புழுங்கும் காய்கதிர்க் கடவுளும் பின் தொடர்வ தேய்ப்பக் கறங்கருவி தூங்கவோங் கும் மலைப்பட்ட ஆரமும் வயிரமும் பிறவுமாமணித் திரளைவாரி மறிதிரைக் கையால் எறித்தெறிய நாற்கோட்டு மதகளிறுபிளிறி யோடும் அலைப்பட்ட வைகைத் துறைச் சிறை அனப்பேடை அம் மானை ஆடியருளே ஆகங் கலந்தொருவர் பாகம்பகிர்ந்த பெண் அம்மானை ஆடியருளே''.

மாணிக்கத்திஞலும், முத்திஞலுமான பந்துகளை எடுத்து வீசிப்போட்டு ஆடிக் கொண்டிருக்கின்ருள் தலைவி. குலையிற் பொருந்திய காந்தள் மலர் போன்ற கைகளிஞல் முத்திஞற் செய்யப்பட்ட அம்மனை முன்செலவும், செம்மையான மாணிக் கத்திஞற் செய்த அம்மானை யானது பின்ஞல் செல்கின்ற ஒரு அழகைக் கூறுகின்ருர் - தாமரை மலரிணைப் பதிஞறு கலைகளை யுடைய சந்திரன் தழுவிச் செல்வதைக் கண்டு பொருத கதிரவ னும் பின் தொடர்வதைப் போலிருந்ததாம். ஒலிக்கின்ற அருவி யானது பெருகி, உயர்ந்திருக்கின்ற மலையில் உள்ள முத்தும் வைரமும் மற்றுமுள்ள சிறந்த மணிக்குவியல்களையும் அள்ளி எடுத்து வரும் அலைகள் பொருந்திய வைகைத் துறையுடைய சிறகுகள் அமைந்த பெண் அன்னமே! அம்மானை ஆடம்மா, அம்மானை ஆடு, என்று செல்லமாகக் கூறுகின்ருர் கவிஞர் பெருமான்.

அம்மை பந்துகளை எடுத்து வீசிக்கொண்டு, அவை மேலும் கீழும் செல்வதைத் தனது கரிய கண்களால் இமை கொட்டாது பார்ப்பது, தன் திருமணத்தில் சிவபெருமான்மீது பூப்பந்து வீசி விளையாடிய சமயத்தில், வண்டுகள் மொய்த்திருந்ததை ஒக்கும் என்கிறார். தேவியின் நாட்டம் பந்துகளின் மீது பாய்வது வானத்தில் தோன்றும் நிலாவின்மீது, இளம்மான்கள் துள்ளித் துள்ளித் தாவுவதுபோல இருக்கிறது என்கிறார்.

வீசும் பந்துகள் அம்மையின் தாமரைபோல் சிவந்த கையின் ஒளியால் சிவப்பு நிறத்தோடும், கருப்பு நிறம் பொருந்திய கடைக்கண் பார்வையால் கறுப்பு நிறம் போலவும், அம்மையினுடைய பற்களின் முத்துப் போன்ற நிறம்படுவதால் நிலா உருண்டைகள் போலவும் தோன்றுகின்றன என்கிறார். அம்மா என்ன கற்பனை!

ஓர் உயிரில் சிவப்பு நிறமான ராஜச குணமும், கறுப்பு நிறமான தாமசகுணமும், வெண்நிறமான சாத்வீக குணமும் பொருந்தியிருப்பதை, இந்த பந்துகளின் மூன்றுவகை நிறங்களை ஒக்கும் என்கிறார்.

இனி மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில், அம்மானைப் பருவத்தின் கடைசிப் பாடலின் கருத்தை மட்டும் ஒருவாறு அறிந்து கொள்வோம். அம்மை மீனாட்சி நீலமணி, மரகதம் முத்து இப் பந்துகளை எடுத்து வானத்திலே வீசுவது தன்னுடைய கணவராகிய சிவபெருமானிடத்திலே கருங் குயிலையும், பசுங்கிளியையும், வெள்ளை அன்னத்தையும் தூது விடுவது போன்று இருக்கின்றது எனச் சிறப்பிக்கின்றார். தன் காதலை அறிவிப்பதற்கு தூது விடுவது போலிருக்கின்றது என்றார்.

தேவர்களைப் பற்றிப் பாடுகின்ற இந்தப் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களிலே இத்தகைய கற்பனைச் செயல்களை நிரம்பக் காண்பது இன்பம் அளிப்பதானாலும், இன்று அன்றாடம் நம் குடும்பங்களிலே, நம்மோடு கொஞ்சிக் குலாவுகின்ற குழந்தைகளின் ஆடல்களைப் பிள்ளைத் தமிழாக-அதில் அம்மானைப் பருவமாகப் பாடுகின்ற புலவர்கள் எதிர்காலத்தில் தோன்றுவார்களாக என்று கூறிச் சுருங்கிய நேரத்தில் முடித்துக் கொள்கின்றேன்.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 15, இதழ் 11-ன் தொடர்ச்சி]

விதிக்கும் விதியை — விலக்கெனவே கொள்ளும்
மதிக்கொருவ ளுகி — மலைந்தொழிந்தேன் சற்குருவே 191

மாதவத்தர் போற்றுமுன்றன் — மாணடியை யேத்தாது
தீதவத்தைப் பட்டுத் — திரிந்தொழிந்தேன் சற்குருவே 192

கள்ளமுளேன் என்றென்னைக் — கைவிட் டிடுவாயேல்
வள்ளலெனற் கெந்தவுரை — வாய்மலர்வாய் சற்குருவே 193

காணுத காட்சியெல்லாம் — காட்டிவைத்தும் காணுதே
ஊணுக்கி எற்கேவீண் — உழைத்துழன்றேன் சற்குருவே 194

மனஞ்செல்லும் தீய — வழிசென் றலைந்தே
இனஞ்சற்று மாருமல் — ஈடழிந்தேன் சற்குருவே 195

மதியமுத முண்டு — மரணபய நீக்கும்
கதியைவிட்டு மூப்பில் — கலங்குகின்றேன் சற்குருவே 199

காலனையே நீக்கும் — கணக்குரைத்து மாமாயா
சாலந்தனில் பட்டுச் — சஞ்சலித்தேன் சற்குருவே. 198

எப்போ தொலையுமிந்த — ஏழையேன் துன்பமெலாம்
இப்போ தெனவறியேன் — என்செய்வேன் சற்குருவே 198

மண்ணனல் சேராதிம் — மலவுடலை நின்னருளால்
விண்ணடையச் செய்வதென்ருே — வித்தகவென் சற்குருவே 199

பாராத பார்வையிலே — பற்றுவித்தும் பாராதே
பாராதி முழ்கிப் — பலனெழிந்தேன் சற்குருவே 200

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

ARUDRA FESTIVAL

(Its Significance with Special reference to Courtallam)

By

Sri. A. C. Shanmukhanainar, B. A., B. L.
Advocate and Ex - Managing trustee
Tenkasi.

Arudra is the name of a star very much bigger than the Sun and it appears as the central figure in a group of stars surrounding it in the month of Margazhi மார்கழி (December-January) the silhouette of the whole group looking like dancing Nataraja to the pious and penetrating eye. God Siva is called and worshipped as Athirayan (ஆதிரையான்) which name is only a derivative of Arudra. திரு. Thiru is prefixed to the name as an honorific and He came to be known as திருவாதிரையான் Thiruvathirayan. The festival of Nataraja is the Arudra festival or Thiruvathirai festival (- December - January) each year, peculiar to Nataraja. Nataraja is said to be in Cosmic dance now and his festival synchronises with the appearance of the Thiruvathirai star on the sky.

Natarajar is credited with 108 varieties of dance, many of which are sculptured in the lower portion of the eastern tower in the Chidambaram temple. Saint Thirumoolar speaks of five kinds of dances - Ananda Koothu (ஆனந்தக்கூத்து), Sundara Koothu (சுந்தரக் கூத்து), Porpothi Koothu (பொற்பொதிக்கூத்து), Thillai Koothu (தில்லைக்கூத்து) and Arputha Koothu (அற்புதக் கூத்து). Koothu means dance. These dances are des-

-cribed in detail in his "திருமந்திரம்". A learned author, Sri Mylai Srinivasan in his "Seven kinds of dance" "எழு வகைக்கூத்து" mentions seven kinds of dance representing the five activities of God Nataraja: Kaliha Tandavam காளிகா தாண்டவம் for creative principle, Gouri Tandavam or Sandya Tandavam (கௌரி தாண் டவம்-சந்தியா தாண்டவம்) for the two divisions of preservation, Samhara Tandavam (சங்கார தாண்டவம்) for dissolution, Tiripura Tandavam for obscuration (திரிபுர தாண்டவம்) Oorthuva Tandavam (ஊர்த்துவ தாண்டவம்) for salvation and Ananda Tandavam (ஆனந்த தாண் டவம்) representing collectively all the five activities. Details are given in the book.

The dance of Nataraja is called Tandavam named after Tandu a legendary sage who learned the art and acquired the skill from God Siva direct. Natan is the most proficient of 3 dances of ancient times. Natan, Vitan and Nayakan (நடன், விடன், நாயகன்) and the king of Natanam (நடனம்) is God Nataraja himself.

We have plenty of literature to explain the purpose of dance. eg. Unmai Vilakkam (உண்மை விளக்கம்) Sivagnana Siddhyar (சிவஞான சித்தியார்) etc. The latter says that it is for the purpose of securing both kinds of fruits இகம் and பரம் Iham and param to countless souls. According to the former, the Supreme Intelligence dances in the soul formed of the letter ya(ய) with a form composed of five letters Si(சி) Va (வ) ya (ய) Na (ந) ma (ம) for removing our sins. These letters represent (சிவம், சத்தி, ஆன்மா, திரோதம், மலம்) Sivam, Sakte, soul Trodham (a form of sakti) evil respectively. Sivayanama is Panchakashara. The dance is performed in this way:- In His feet is *na* Navel *ma* shoulders *si*, face *va* head *ya*. There is an arch

Tiruvasi (திருவாசி) surrounding the image of Nataraja with three or five tongued flames in the periphery. This arch represents *Omkara* and *akshava* which is never separate from Omkara. Omkara is a compound of three letters A. U. M. (அ. உ. ம.) representing Brahma, Vishnu aud Rudra.

What is not known is that there is a fourth part of Omkara called Ardha matra sound called Turiyam or Chathurtham representing Siva the supreme Lord of all. Creation starts from the drum in the upper right (hand of Nataraja. Protection from the hand of hope abaya) fire in the upper left hand produces destruction. The foot planted on Muyalaka (evil) represent Trobava or obscuration and the rising foot gives mukthi. The lower left hand points to Mukthi. By these means God Nataraja drives away darkness (maya) burns karma and stamps down mala (Anava) and showers grace and lovingly plunges the Soul in the sea of bliss. To impress the idea that Sakti is an essential part of God Nataraja, He wears a todu தோடு (an ear oranament worn by women) on the left ear; but on the right ear he wears a kuzhlai (குழை) an ornament for males. Sakti is Sivakami and She is represented by a separate and smaller figure standing on the left. Nataraja's two eyes slightly glance the Sakti. The two eyes represent sun and moon while the third eye நெற்றிக் கண் symbolises wisdom.

Courtallam is a sacred Hindu Shrine in South India glorified by Nayanmars. More important is that it is one of the famous five sabas where God Nataraja is said to be on Cosmic dance. Each saba represents one of the five active principles of God Siva in the form of Nataraja. The five sabas are Ratna saba

at Tiruvengadu, Kanaka saba at Chidambaram Rajitha saba at Madura, Tambira saba at Tinnevelly and chitra saba at Courtallam. (Ratnam, Gold, silver, copper, pictures) These sabas represent respectively the principles of creation, (ஆக்கல்), Anugraha, (அருளல்), protection, (காத்தல்), dissolution (அழித்தல்), and obscuration (மறைத்தல்). Some learned scholars would differ and say that Chidambaram represents preservation,M adurai dissolution, Tinnevelly obscuration, and Courtallam Anugraham. The order of sabas, Tiruvalangadu, Chidambaram, Madurai, Tirunelveli, and Courtallam may be said to symbolise, the evolution and involution of life. The sabas are geographically from north to south or from south to north. On the evolutionary side the order is typhical of the spirutual progress made by individual soul, starting from humble beginnings at Courtallam (mere pictures) it grows gradually in wisdom passing through the stages of copper, silver, and gold in the ascending order and eventually it attains the highest wisdom (Ratnam the most Valuable of precious stones), at Tiruvelangadu. Similarly on the involution side, the soul is in the highest form of worldly enjoyment (Ratnam) and passing through various stages of such enjoyment by gradually discarding them, gold, silver, copper it ultimately merges itself in the universal spirit at Courtallam, represented by mural pictures, in the saba unlike copper images in other sabas. Chitra saba at Courtallam is a hall of pictures dedicated to God Nataraja, and decorated with freshcoes, mural paintings of deities and devotees, Holy Leelas, puranic or religious events or stories. The unique feature of this saba is the offer of Tandava Deepa Aradhana to God Nataraja particularly on the Arudra day with

elaborate rituals, though such an Aradhana is offered in a modest scale on other festival occasions.

Arudra festival is the major festival at Courtallam getting bumper crowd of worshippers particularly on the Arudra day. Unlike other festivals, supreme importance is given to God Nataraja as He is the clearest exposition of the five fold activities of God Siva.

On the Arudraday, a cow of darkish colour (காராம் பசு) is brought in the presence of God Nataraja before Deepa Aradhana commences. The cow represents the individual soul. The darkish colour denotes that the soul is immersed in Anavamala (ஆணவ மலம்) which clouds its spiritual vision. The Cow stands at first with its back towards the God. This means that the soul is after wordly pleasures without the consciousness of Godhood. Then a bolus of rice is given to it and is chewed by it. This is symbolical of the worldly experience in its worldy life. Then a mirror is shown to the cow still standing backwards. It sees its own self in the mirror. This means that the cow (soul) sees ie realises its own self. Lastly it is turned towards God. This signifies that the cow ie soul turns towards God and attains salvation through self realisation. The whole ceremoney is symbolical of the pilgrimage of the soul from worldiness to Godliness or from world-hood to Godhood. Deepa Aradhana follows. This is bestowal of divine Grace. Tandava Deepa Aradhana obtains only in Courtallam. Even richer or more famous Temples cannot boast of such an interesting phenomenon. This form of Aradhana represents the cosmic dance of Nataraja. It consists of 3 stages quickly following one another. In the earlier or the first stage Devas pray for a view of the divine dance- In the second stages

comes the actual dance, tuned to appropriate music and talam, quite different from other varieties of recitals on other occasions. The dance is symbolised by a Pushpa Deepam (புஷ்பதீபம்). This Deepam consists of seven circular brass or silver discs strung on a vertical row. These discs ascend in a diminishing manner on the rod with small serial hollows, bearing threaded lights until the deepam reaches a lighted point at the top end. The overall appearance being that of an illuminated cone. The poojari performing this aradhana holds the Deepam firmly with both hands and moves it piously backwards and forwards, right and left, up and down in rhythmic steps all tuned to the varying cadences of Ananda Bairavi (ஆனந்த பைரவி) Raga and chapputalam (சாப்பு தாளம்) The whole illumined procedure draws the picture of the Holy Dance and lasts till the Raga and Tala completed ie for about 20 minutes. Other usual deepams then follow. In the third stage Devas pray God to resume his usual position. At the conclusion of this aradhana ceremony, music enriches and expresses itself in many voices (14) supposed to emanate from the drum in his right hand. This Deepa aradhana and the concordant music are a thrilling experience tranporting the worshippers to a land of unspeakable joy inspired by silent and single-minded devotion. Inspired by the beauty and art of this form of Arudhara unknown elsewhere, the Hindu Religi ous and charitable Department of the State rightly or wrongly arranged for a spectacular display *at Madras* several years ago, which elicited the admiration of all visitors sending a premium on sure Bhakti or appreciation as a wonderful art-an incommuinicable and unprecedented experience.

As a work of art, the image of God Nataraja is a masterpiece of creative imagination in the back ground of deep religious fervour. According to J. N. Banerji. an authority on art, it is sublime creation in the domain of universal art. Romain Rolland describes it as an example of supreme synthesis. All is harmonised. All the forces of life are grouped in a forest whose thousand waving arms are led by Nataraja the master of dance. Everything has its place. Every being has its function; and all take part in the divine Concert, their different views and their dissonances creating in the words of Heraclitus a beautiful harmony.

Courtallam can justly pride itself on this unique feature of Aradhana - The magnificient silver cascade and the running river on the right and the glorious mountain scenery around it are massive in side and impressive on minds - None but the confined sceptic will fail to see in it the immanence of God Nataraja who is the very heart of the universe dancing invisibly in each individual soul - But for the dance, life would be extinct.

All glory to Nirutamoorthi of Courtallam. Tiruvathirai is the festival of the release of the soul from the state of bondage. திருவாதிரை = திரு + ஆ + திரை = God, soul, and bondage. திரை hides the view of God and God in His boundless grace lifts the veil, and reveals himself to the deserving souls.

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

16

No one need climb up a mountain to have a look at the sky. Forgetting this truth if one would climb up a mountain top, he will then realize that the sky is still up at the same distance, and that he has not bettered his position in anyway.

Like this, in the spritual field,some seekers assume that they can attain the Supreme Self by false pretences without any true love in their hearts. Those who have got strong faith in ritualism are very showy, chanting empty words always. With all these vain actions they even believe that they can attain salvation. God is truth who cannot be approached by any of the false means, as these actions are the outcome of a sense of egoism. This idea is brought out in the following two line song.

வான்காண வேண்டின் மலையேறலொக்கும் உன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம் பராபரமே.

(பொ-ரை.) தேவரீரைக் காணுவான் வேண்டி நான் பாவனை செய்கின்ற பாவனையானது ஆகாயத்தைக் காண விரும்பினான் மலையேறுதலை நிகர்க்கும்.

Oh......Lord Supreme! All my ritualistic approach with a sense of egoism to reach you is futile. It is just as a man climbing up to a hill top to see distant sited sky.

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

பூவும் நாரும்

திரு. வா. ராமலிங்கம் பிள்ளை அவர்கள்,
தெற்குத் தெரு,
ஆழ்வார்குறிச்சி.

———: o :———

தழைத்த செடியில் மலர்ந்து மணம் தருவது பூ............ மரங்களின் பூவும் கொடிகளின் பூவும் உண்டு. அவற்றில் சில மணமற்றனவாகவும் சில மணமுற்றனவாகவும் காணலாம். சில நிறமும் அழகும் நிறைந்தன. சிற் சில சாதாரணமானவை.

சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோரும் பூவை விரும்புவர். சிறுவரும் பருவ முடையோரும் தாங்கள் நுகர்ந்து அணிய எண்ணுவர். பக்தரும் முதியோரும் பரம் பொருளுக் கணிவித்துப் பரவி வழிபடக் கருதுவர்.

யார்,யார், எவ்விதம் அணியவேண்டுமானாலும் அவற்றைத் தொடுக்க நார் அவசியம். அதற்கான நார் செழித்துக் காய்த்து ஓய்ந்த வாழையின் கழிவுத் தடையே யாகும். இந்த நாருக்குக் கவர்ச்சியும் மணமும் கிடையாது. எவ்விதத்திலும் நுகரும் தன்மை அமையாதது. ஆனால் பூவைக் கட்டிப் புனைவதற்கு மிகுதியும் உதவுவது. மணமிக்க பூக்களுடன் இந்த நார் அவற்றின் மணத்தைப் பெறுகிறது மக்கள் தலையிலும் பரமன் முடியிலும் பொருந்தும் வாய்ப்பையும் அடைகிறது. நாரில் கட்டாத பூ செவ்விதாய் அணிந்து அலங்கரிக்கக் கூடாததாகிறது.

இங்கு நாம் கருதிக் கூறப்புகுவது மற்றொரு விதமான பூவும் நாரும் ஆகும். அத்தகைய பூவாவது தெய்வத்திருவடிகள் என்பது.

"போற்றியருளகநின் ஆதியாம் பாதமலர்"

"சென்னிமிசைப் பாதமலர் சூட்டிஞன் சிவபெருமான்"

"திருவடித் தாமரை; பாதத் தாமரை" என்பனவற்ருல் தெளிய லாம். இந்தப்பூ மக்கள் கைக்கு அகப்படாதது. ஆனல் அன்பர்கள் கருதிக் கசிந்து போற்ற உள்ளத்தே உற்றுப் பொருந்துவது. நாறும் உடலே நறுமணந்தேக்கிப் பூஞெஞத இன்பமணம் பொருந்தச் செயவல்லது. இதனே எப்படிஎடுப்பது? எந்த நாரில் தொடுப்பது? கையால் தொட்டு வாழை நாரில் கட்டவராத தல்லவா? எடுப்பதற்கும் தொடுப்பதற்கும் நம்பெருமக்கள் எளிய இனியமுறை வகுத்துதவியுள்ளனர். இந்தப்பூவை உருகிக் கசிந்து கரையும் உள்ளத்தால் எடுக்கலாம். உள்ளத்தே ஊறும் அன்பு என்னும் நாரில் ஆனந்தமாகத் தொடுக்கலாம். அங்கு இறைவன் வந்து தங்கி நிலேத்த இன்ப மணம் நிலவச் செய்கிருன். தனி யாக அல்ல சத்தியாகிய மாதிஞெடும்.

" எந்தமாதவம் செய்தனே நெஞ்சமே
பந்தம் வீடவை ஆய பராபரன்
அந்தமில்புகழ் ஆரூரறநெறி
சிந்தையுள்ளும் சிரத்துளும் தங்கவே"

" ஏதுமொன்று அறிவில ராகிலும்
ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்கு
பேதமின்றி அவரவர் உள்ளத்தே
மாதுந்தாமும் மகிழ்வர் மாற்பேறரே"

எனவே இறைவனது இறைவியினது திருவடித் தாமரையாகிய மலர்கள் நம்முள்ளத்தே இடைவிடாத் தியானத்தால் எய்தப்பெறு கிருேம். வந்தமைந்த மலர்களே வாடாமல் சிதருமல் ஊற் றெடுக்கும் அன்பு நாரிஞல் அமையப் பிணிக்க வேண்டும்.

"அன்பெனு நார் தொடுத்தலங்கல் சூட்ட"

"நலத்தின் கண் நாரின்மை நாணுமை"

என்பன வாய ஆன்றேர் உரைகளால் "அன்பு" நார் எனக் குறிக்கப் பெறுவது தெரிகிருேம்.

இதனைச் சைவ மேன்மையும் ஆக்கமும் இமயம் வரை தெய்வப் பண்பால் பரப்பி நிலைக்கச் செய்த தென்னாட்டுக் கண் மணியாம் "குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீமீனாட்சியம்மை இரட்டை மணி மாலையில் ஒரு பாட்டிலமைத்து நம்மனோர் உணரச் செய் துள்ளனர். அது வருமாறு,

நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமி ழுண்டேனைப்
பாவுண் டினங்கள் பலவுமுண் டேபங்கிற் கொண்டிருந்தோர்
தேவுண் டுவக்கும் கடம்பா டவிப்பசுந் தேனின்பைந்தாட்
பூவுண்டு நாரொன் றிலையாந்தொடுத்துப் புனைவதற்கே

எனவே மெய்யன்பராயினார் உள்ளத்து அன்பெனும் நார் மிகச் செய்து திருவடிக்கமலங்களாகிய பூக்களைப் புனைந்து புணர்த்தி மலம் நீங்கி மணம் பெற முயலுவோமாக.

★ திருவிசைப்பா ★

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

★ தெளிவுரை ★

புதிய பதிப்பு

(குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை வெளியீடு)

376 பக்கம் வெள்ளைத் தாள். தனிப் பிரதி அடக்க விலை ரூ. 1–50

ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

கிடைக்குமிடங்கள் :–

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
   ஸ்ரீவைகுண்டம். (*திருநெல்வேலி ஜில்லா*)
2. "தியாகராச விலாசம்"
   53, பிள்ளையார் கோயில் தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
   திருவல்லிக்கேணி, சென்னை–5

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி

The marriage was broken. The bride remained a virgin and at last died. Sundarar started his pilgrimage. On his way to Chidambaram he visited Tiruvadigai, where Saint Tirunavukkarasu was reclaimed by Lord Pasupati. He did not want to tread on the soil, on which St. Tirunavukkarasu had walked. So he spent the night in a monastary nearby that town. There an old man was also sleeping. His feet touched the head of Sundarmurthi. The latter questioned the old man about this and the old man replied because of old age he could not realise that his feet were touching another's head. Sundarar moved aside and slept. After sometime he felt that somebody's feet were pressing on his head. He woke up and found the same old man sleeping there resting his feet on Sundarar's head. He was much annoyed and so questioned the old man 'who was he'. The old man replied 'Don't you know me' and vanished. St. Sundarar at once realised it was only his Lord who had come to bless him. He was overwhelmed with joy for the Grace had been showered upon him unasked for and with grief for not having realised it earlier. There poured out another decad of hymns.

திருவதிகை வீரட்டானம்: பண்: கொல்லிக் கௌவாணம்

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல் உடையானை
விடையானைக் கறைகொண்ட கண்டத்து
எம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.

"Is there anyone who does not know his Lord? I have been living with the hope that my God would place His feet on my head and bless me, my God who wears the crescent moon on His head, who rides the Bull, who wears the skin of the elephant, who dances in the cremation ground, who is blue-throated and who is enshrined at Veerattanam on the northern bank of the Kedila river. Will I ever abuse Him"

(To be continued)

உ

ஆறுமுகம் துணை செய்யும்

நான் தான்

ஸ்கந்தசஷ்டி இலவச வெளியீடு,

விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முருகன் அடி-பூதூர், துரைவேலு முதலியார்,

5, ஆயலூர் முத்தியா முதலித் தெரு,
ஜார்ஜ் டவுண், மதராஸ்-1.

திருச்செந்தூரில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு (கந்தர் சஷ்டி) அன்னம்பாலிப்பு நிதி

நிலப்பெறுமானம் ரூ. 9000/-

ஸ்ரீ செந்திலாண்டவன் திருவருளால் ஊமை நீங்கப் பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பாடியருளியும், மதுரையில் ஸ்ரீ மீனாட்சியம்மை மீது பிள்ளைத் தமிழ் பாடி அம்மையாரால் முத்தாரம் அணியப்பெற்றும், திருமலைநாயக்க மன்னன் வேண்டிய வண்ணம் அனைவர்க்கும் நன்னெறி ஊட்டும் நீதிநெறி விளக்கம் அருளியும், சிதம்பரச் செய்யுட் கோவை, பண்டார மும்மணிக் கோவை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் முதலாய நூல்களைப் பாடியும், காசிக்கு எழுந்தருளிச் சகலகலாவல்லி மாலை பாடி இந்துஸ்தானி மொழி கைவரப்பெற்று முகலாய மன்னனைச் சிங்கத்தின் மீதேறிச் சென்று கண்டு தம் இணையிலாச் சொல் வன்மையாலும் நடையருப் பெருந்துறவாலும் அவனை வணக்கிச் செயற்கரிய செயல் பல புரிந்து கேதாரத்துறை, கேதார மந்திரம் அறச்சாலை ஆகியவற்றை நிறுவிக் குமரி முதல் காசிவரை தண்டமிழைப்பரப்பியருளிய தவமுதல்வராகிய ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் அவர்களுக்குச் செந்திலாண்டவன் அருளிய கருணையை நினைவு கூர்ந்து திருச்செந்தூரில் ஐப்பசி மாசத்தில் கந்தர் சஷ்டித் திருவிழாவில் கந்தர்சஷ்டித் திருநாளுக்கு மறுநாள் அன்னம்பாலித்தற் பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றுள்ளது. இது 'திருச்செந்தூரில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு (கந்தர் சஷ்டி) அன்னம்பாலிப்பு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதன் சேர்க்கையில் விளக்கம் கண்டிருப்பதும் நமக்குச் சொந்தமாய் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்து வருவதும் ஆன தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுக்கா, கொரநாட்டுக் கருப்பூர் வட்டம், சத்திரம் கருப்பூரில் உள்ள நமக்குச் சொந்த

மான நன்செய், புன்செய், தோட்டம், மனை ஆகிய இவற்றினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வருமானத்தில் சர்க்கார் கிஸ்தி, மராமத்துச் செலவு, விருத்தியாம்சச் செலவு, நிர்வாகச் செலவு முதலிய செலவினங்கள் போக எஞ்சிய தொகையைக் கொண்டு ஆண்டு தோறும் திருச்செந்தூரில் ஐப்பசி மாதத்தில் கந்தர் ஷஷ்டித் திருவிழாவில் கந்தசஷ்டிக்கு மறுதினம் நண் பகலில் அந்தணர், அருந்தவர் ஏழைகட்கு அன்னம்பாலிப்பு நம்மால் நடத்தப் பெற்று வரும்.

3. ஆண்டுதோறும் வரும் வருமானத்துக்கு ஏற்ப நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் தயாரிக்கப் பெறும் திட்ட ஜாப்தாவின்படி திருச்செந்தூரில் ஷ்டி அன்னம் பாலிப்பு நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் நடத்தப்பெற்று வரும்.

4. ஷ்டி அன்னம் பாலிப்பு நடத்திய பிறகு எஞ்சியுள்ள தொகையை நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் தம் விருப்பம் போல் இது போன்ற பிற அறங்கள் செய்யப் பயன் படுத்தப்பெறும்.

5. இத்தருமத்திற்கென ஒதுக்கப்பெற்ற நிலபுலங்கள் நம் பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும், சுவாதீனத்திலும், பரிபாலனத்திலும் இருந்து வரும். இச்சொத்துக்களின் மதிப்பு ரூ. 9000/- உத்தேச வருட வருமானம் ரூ.350/-.

திருப்பனந்தாள்,
Dated 17-11-1964. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered as document No. 1845 volume No. 1285 at pages 105 to 107 on 19-11-1964 at the Sub - Registrar's office, Kumbakonam.

திருப்பனந்தாள் — ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ	ந.பை
1	விநாயகர் திருமுறை (அச்சில்)		—	
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3	50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3	00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும் புதிய பதிப்பு)	...	2	75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ,,	...	2	00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1	30
7*	திருவாசகம் ,,	...	0	56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு)	...	2	90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும்	...	1	50
	திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்)	...	0	56
10*	திருமந்திரம் ,, (புதிய பதிப்பு)	...	2	25
11*	பதினோராந்திருமுறை ,, ,,	...	1	50
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0	25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	...	0	50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்)	...	3	00
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு (அச்சில்)	...		
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	...	3	00
17	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரையுடன்	...	1	25
18	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	...	1	75
19	கந்தபுராணம் — முதல் மூன்று காண்டங்கள் ,,	...	2	75
20	,, யுத்த தேவகாண்டம் ,,	...	2	00
21	தக்ஷ காண்டம் ,,	...	1	50
22	கந்தபுராணம் உரைநடை	...	3	00
23	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	...	0	25
24	கந்தரநுபூதி	...	0	13
25	கந்தர் கலிவெண்பா — ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	...	0	37
26	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	...	0	10
27	கந்தர் கலிவெண்பா - மூலமும் — உரையும்	...	0	37
28	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0	50
29	சகலகலாவல்லிமாலை — ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0	06
30	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1	50
31	திருக்குறள் — பொருட்பால் ,,	...	2	50
32	திருக்குறள் — காமத்துப்பால் ,,	...	1	00
	நெ. 30, 31, 32 திருக்குறள் 3 புத்தகமும்	...	4	00
33	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0	75
34	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0	13
35	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0	75
36	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0	37

Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574

37	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை - மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2 75
38	திருவாரூர் நான்மணிமாலை — முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
39	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
40	பண்டார மும்மணிக் கோவை — காசிக் கலம்பகம் — சகலகலாவல்லி மாலை	...	1 00
41	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
42	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
43	பெரியபுராணம் — உரைநடை	...	2 00
44	திருவிளையாடற் புராணம் — உரைநடை	...	2 25
45	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
46	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
47	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
48	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
49	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
50	ஷெ ஷெ பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
51	ஷெ ஷெ காமத்துப்பால் ஷெ	...	1 20
52	அபிராமி அந்தாதி — தெளிவுரையுடன்	...	0 50
53	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
54	கந்தரனுபூதி-தெளிவுரையுடன்	...	0 35
55	திருவாரூர்-திருப்பனுவல்கள்	...	0 10
56	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
57	பழமொழித்திருமுறை	...	0 25
58	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50
59	Hymns and Proverbs	...	0 30
60	திருத்தொண்டர் புராணசாரம்	...	0 40
61	அப்பர்விழா வெளியீடு	...	0 25
62	நவக்கிரகமாண்பு	...	0 25
63	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும்	...	0 30

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோயில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 49, 50, 51) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 12- '64.